Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய [illegible] National Tamil Daily

மலர் 8 (22 2 66) இதழ் 14

[illegible] மாசி 11 [illegible] செவ்வாய்க்கிழமை

## ஜி. ஸி. ஈ. ஆங்கிலப் புத்தகங்கள் இல்லை

கொழும்பு, திங்கள்

ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) க்கான ஆங்கிலப் பாடப் புத்தகங்கள் விற்பனையாளர்களிடம் இல்லை என்றும், இதனால் மாணவர்களுக்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

புத்தகங்கள் தேவை என கடந்த செப்டம்பர் மாதமே அரசாங்கத்துக்குத் தெரிவித்திருந்தும், அரசாங்க தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதென்றும் விற்பனையாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

# 29-வது ஷரத்தை நீக்க முடியாது

## தீவுப்பகுதி எம். பி. கருத்து

யாழ்ப்பாணம், செவ்வாய்

"இலங்கைக்குப் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும்போது இப்போது சிறுபான்மையினருக்கு ஓரளவு பாதுகாப்பளிக்கும் 29-வது ஷரத்தை நீக்கிவிட வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் என்னதான் முயற்சி செய்தாலும் அந்த ஷரத்தை நீக்கிவிட முடியாது. அந்த முயற்சிக்கு நாம் இறுதிவரை இடம் கொடுக்கவும் மாட்டோம்.

இவ்வாறு ஊர்காவற்றுறைத் தொகுதி எம். பி. யும் தமிழரசுக் கட்சித்தலைவர்களில் ஒருவருமான திரு. வி. நவரத்தினம் 'ஈழநாடு' பிரதிநிதியிடம் தெரிவித்தார்.

மூன்றிரண்டு பங்கு வாக்குகளைக்கொண்டு கூட அரசியல் அமைப்பில் 29-வது ஷரத்தை நீக்கிவிடமுடியாதுஎன்று கூறிய திரு. நவரத்தினம் இதற்கு பிரிவுக் கவுன்சில் வழக்கு ஒன்றில் அளித்த தீர்ப்பையு உதாரணமாகக் குறிப்பிட்டார்.

இந்தியா மற்றும் பலநாடுகளின் அரசியல் அமைப்பில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சேர்க்கப்பட்டுள்ள விதிகள் இலங்கையின் புதிய அரசியல் அமைப்பில் சேர்க்கப்படுவதாகஇருந்தாலும் கூட, அவை கூட 29-வது ஷரத்து அளிக்கும் பாதுகாப்பைவிட குறைந்தவையாகவே இருக்கு என்று திரு. நவரத்தினம் குறிப்பிட்டார்.

### அந்நிய தலையீடு

"இலங்கை அரசியல் அமைப்பில உள்ள 29-வது ஷரத்து இந்தநாட்டிலுள்ள சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டதுமன்றி, சிறுபான்மையினருக்கு நன்மையளிக்கும் போர்வையில் ஏகாதிபத்தியத்தின் உள்நாட்டுத் தலையீட்டுக்கும் வழிவகுத்திருக்கிறது" என்று திரு. வி. பொன்னம்பலம்உரும்பராய் இந்துக்கல்லூரி சரித்திர அரசியல் மாணவர் மன்றக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார். இலங்கைப் பார்லிமெண்டின் ஆதிபத்திய உரிமையைப்பற்றி பிரிவிகவுன்ஸில் அளித்த தீர்ப்பிலிருந்து இலங்கையின் சுதந்திரம்பற்றியே சந்தேகம்கொள்ள வேண்டியுள்ளதென்று திரு. பொன்னம்பலம்கூறினர்.

காங்கேசன்துறை

## பட்டினசபைத் தலைவர் மீது அவநம்பிக்கை பிரேரணை

### இன்று விவாதிக்கப்படுகிறது

மாவிட்டபுரம், செவ்.

காங்கேசன்துறைபட்டின சபைத் தலைவர் திரு. முத்துநடவீரசிங்கம் மீது மேற்படி பட்டினசபையின் மூன்று அங்கத்தவர்களால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று காலை பத்துமணிக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இன்றுகாலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி மாணிக்கவாசகர் தலைமையில் பட்டினசபை மண்டபத்தில் நடைபெறும் விசேஷ கூட்டத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் உடனடியாக புதிய தலைவர் தெரிவும் நடைபெறும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்ளுல் பட்டினசபையின் இரண்டாம் வட்டார அங்கத்தவரும் வழக்கறிஞருமான திரு. ஆ. வ. சதாசிவம் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்படுவார் எனத் தெரியவருகிறது. இதற்கான ஒரு கனவான் ஒப்பந்தம் பட்டினசபை அங்கத்தவர்களான திருவாளர்கள் சு கிருபாமூர்த்தி, ஆ வ. க. சதாசிவம், சு. வே. சீனிவாசகம், பி. இமானுவேல் ஆகியோருக்கிடையில் எழுதப்பட்டுள்ளது. இப்பட்டினசபையின் அங்கத்தவர்கள் தொகை ஆறு என்பது குறிப்பிடத்தக்கது

சென்ற புதன்கிழமை நடைபெற்ற பட்டினசபையின் மாதாந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து சபை வளவிற்குள் கைகலப்பு நடைபெற்றமையால் இன்று நடைபெறும் கூட்டத்திற்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பளிக்கப்படும் என்றும் இதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினர்.

## 'கோஷ்டி மனப்பான்மை கூடாது'

### வரவேற்பில் மேயர் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"யாழ்ப்பாண நகரமும் பொதுமக்களும் முற்போக்குடன் முன்னேறவேண்டுமானல் மாநகரசபை உறுப்பினர்கள் தங்களுக்கிடையே உள்ள போட்டி, கோஷ்டி மனப்பான்மையை அறவே மறந்து தூயஉள்ளத்துடன் பாடுபடமுன்வரவேண்டும். அப்பொழுதுதான் நமது நகர வரியிறுப்பாளர்கள் யாழ்ப்பாண மாநகர சபையினுல் நல்ல பலனை அனுபவிக்கமுடியும்" என கந்தர்மடம் சனசமூக நிலைய சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில் யாழ்ப்பாண மேயர் திரு சி. நாகராஜா கூறினர்.

இராசவாசல் முதலியார் திரு. சி. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில மேயர் நாகராஜா மேலும் பேசுகையில், எதிர்கோஷ்டி எவ்விஷயத்தையும் சிறப்பாகச்செய்ய இருக்கவேண்டுமேதவிர சீரழிக்க இருக்கக்கூடாது என்றும், பஸ்நிலைய பிரச்னையை சுமூகமாக தீர்ப்பதற்கு இ. போ. ச. அதிகாரிகள் இணங்கியுள்ள தற்போதையசூழ்நிலையில் நகர முன்னேற்றத்திற்கு மாநகரசபையுடையவும் பொதுமக்களுடையவும் ஆதரவு மிக அவசியம் என்றும் கூறினர்.

டாக்டர் கனகரத்தினம் பேசுகையில், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி நோயாளர் சிகிச்சை பெறுவதற்கு போதிய இடவசதி இல்லாததினுல் யாழ்ப்பாண மாநகர சபைக்குரிய மின்சார நிலைய வீதியை யாழ்ப்பாண ஆஸ்பத்திரி கட்டிடத்தை விஸ்தரிக்க உபயோகப்படுத்த மேயர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

கந்தர்மடம் சனசமூக நிலைய செயலாளர் நா. சண்முகநாதன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

சிகிச்சை பெறுவதற்காக ஆஸ்பத்திரிக்கு செல்லும் கர்ப்பிணிகளும், நோயாளர்களும் நாள் முழுவதும் மருந்து வாங்குவதற்காக கால்கடுக்க நோயுடன் ஆஸ்பத்திரிகளில் அவதிப்படும் நிலைமையை மாற்ற மேயர் புதிய விடுதிகளையும் ஆயுள்வேத வைத்தியசாலையையும் திறக்கவேண்டும். மூன்று மாதத்திற்கு ஒரு முறை மேயர் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டைக் கூட்டவேண்டும்."

முதலியார் சி. முத்துத்தம்பி பேசுகையில் கொழும்பில் உல்லாசபிரயாணிகளுக்குரிய வசதிகள் யாழ்ப்பாணத்தில் இல்லையென்றும் இக் குறைையை மேயர் தீர்த்துவைப்பார் என்று நம்புவதாயும் கூறினர்.

## கோழிக்கூட்டில் குள்ளநரியா?

வெல்லிங்டன், பெப் 21

"தென்வியட்னம் கலப்பு அரசாங்கம் ஒன்றில் வியட்காங்கியரைச் சேர்த்துக்கொள்வது குள்ளநரியைக் கோழிக்கூட்டில் போடுவதற்கொப்பாகும். இறுதியில் எல்லாக் கோழிகளையும் அது சாப்பிட்டுவிடும்" என அமெரிக்க உபஜனதிபதி ஹியூபர்ட் ஹம்ப்ரி கூறினர். செனட்டர் கென்னடியின் மேற்கண்ட யோசனை குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆ. துரைசிங்கம் பேசுகையில் மேயர் பதவி [illegible] கொண்டுள்ளதன் [illegible] வெற்றி [illegible] என்றார். (ந. நி.)

## சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சிகளின் சந்தா நிதி

### உபயோகம் பற்றி தொழில் இலாகா ஆராயும்

கொழும்பு, திங்கள்

லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன தொழிலாளர்களிடமிருந்து பெறும் சந்தாப்பணத்தை எவ்வகையில் செலவிடுகின்றன என்பதுபற்றி தொழில் இலாகா ஆராயவிருக்கிறது.

சந்தாநிதி துஷ்பிரயோகம் செய்யப்படுகிறதா என ஆராயப்படும்.

அரசியல் காரணங்களுக்காக இந்நிதி உபயோகிக்கப்பட்டதா என்பதும் ஆராயப்படும்.

சந்தாநிதி துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக ஏராளமான குற்றச்சாட்டுகள் வந்ததைத் தொடர்ந்து இம் முடிவு செய்யப்பட்டிருக்கிறது

தொழில் இலாகாவுக்கு இதுசம்பந்தமாக ஏராளமான கடிதங்கள் கிடைத்திருக்கின்றன.

நாவலர்சந்திபடுகொலை

## மார்ச் 7 வரை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்.

நாவலர் சந்தி படுகொலை வழக்கு நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. டி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது

எதிரிகளான சீனி இரத்தினம், சுப்பிரமணியம், முருகேசு சண்முகம் ஆகியோர் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டனர்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு ரி கணேசலிங்கம், திருவாளர்கள் எஸ் செல்லத்துரை, ஆர். விஸ்வநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர். பொலிஸ் தரப்பில வழக்கறிஞர் கே. வி. சண்முகநாதனின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

மாஜிஸ்திரேட் விசாரணையை மார்ச் 7-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

## மந்திரிசபை மாறுதல்கள்

சைகோன், பெப். 21

தென்வியட்னும் மந்திரிசபையில் பல மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. தென்வியடனுமில் சமூக, பொருளாதார சீர்திருத்தங்களை விரைவுபடுத்துமுகமாகவே இந்த மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

## கப்பலிலிருந்து வெளியேறியவர்கள்

கொழும்பு, திங்கள்

கொழும்புத்துறைமுகத்திலுள்ள கப்பல் ஒன்றிலிருந்து 100 தொழிலாளர்கள் வெளியேறியதைத் தொடர்ந்து இதற்கான காரணங்களை துறைமுக கார்ப்பரேஷன் கேட்டிருக்கிறது. நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் அது தீர்மானித்திருக்கிறது.

## கானு அதிபர்

கராச்சி, பெப். 21

கானு ஜனதிபதி டாக்டர் நிக்ருமா நாளை, ஹனேய் செல்லும் வழியில் கராச்சி வருகிருர். அதிபர் அயூப்கானுடன் அவர் பேச்சு நடத்துவார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

காலம் என்னும் ஆழ்கடலில் நீந்துபவனுக்கு, அறிவு என்னும் துறைமுகத்தை அடைய கலங்கரை விளக்காக அமைந்துள்ளவை, சிறந்த அறிஞர்களின் உயர்ந்த நூல்களே.

—மகாகவி தாகூர்


# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna; Phone: 387

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மாசி மீ 11 உ (22-2-66)


## பல்கலைக்கழகம்

இரண்டரை மாதங்களின் பின் இலங்கைப் பல்கலைக்கழகம் இன்று மீண்டும் திறக்கப்படுகிறது. இது பலருக்கும் ஆறுதலளிக்கும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் டிசம்பர் மாதம் நடந்த சம்பவமும் அதைத் தொடர்ந்து பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டதும் நிச்சயம் எவருக்கும் மகிழ்ச்சியளிக்கக்கூடிய விஷயங்களல்ல. குழப்பச் சம்பவங்களைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட தனிநபர் விசாரணைக் கமிஷன் தனது அறிக்கையைச் சமர்ப்பித்த பின்னரே பல்கலைக்கழகம் இன்று மீண்டும் திறக்கப்படுகிறது. விசாரணைக்கமிஷன் தெரிவித்திருக்கும் சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு அமுல் நடத்தப் போகிறதா? எப்பொழுது அமுல் நடத்தும்? விசாரணைக்கமிஷன்கள் நியமிக்கப்படுவதும் விசாரணையின் பின் அவைகள் சமர்ப்பிக்கும் அறிக்கைளும் தெரிவிக்கும் சிபார்சுகளும் மூலைக்குள் ஒழிந்து கொள்வதும் இங்கு சகஜம். பல்கலைக்கழக தனிநபர் கமிஷன் அறிக்கைக்கும் சிபார்சுகளுக்கும் இக்கதி நேர்ந்துவிடக்கூடாது. எதிர்கால நற்பிரஜைகளையும் அறிஞர்களையும் தலைவர்களையும் உருவாக்கும் பல்கலைக்கழக விஷயத்தில் உடனடியாகக் கவனம் செலுத்தி காரியங்கள் செய்ய வேண்டியது அவசியம். இவ்விஷயத்தில் அரசாங்கத்துக்கு மட்டுமல்ல, நாட்டின் நலனிலும் நாட்டின் எதிர்காலத்திலும் அக்கறையுடையோர் அனைவருக்கும் பொறுப்பு உண்டு.

சென்ற டிசம்பர் மாதம் 7-ம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடந்த குழப்பத்தில் தீவிரமாகப் பங்குபற்றியதாக கூறப்படும் பதினைந்து பட்டதாரி மாணவர்களையும் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்றும் உப அத்யட்சகரை, பல்கலைக்கழக விடுதி ஒழுங்குச் சபை கேட்டுள்ளதாம். இந்தச்சபையும் மாணவர் குழப்பம்பற்றி விசாரணை செய்து வருகிறதாம். தனிநபர் விசாரணைக்கமிஷன் அறிக்கை வெளிவருவதற்கு முன்பே, பல்கலைக்கழகத்தில் நிர்வாகச் சீர்கேடும் மாணவர் மத்தியில் அதிருப்தியும் போதனாசிரியர்களுக்குள் கோஷ்டிப் பிரிவினையும் மலிந்துள்ள தென்பதை நாடறிந்திருந்தது இந்தச்சபைக்கு மட்டும் இந்த விஷயம் முன்னர் தெரிந்திருக்கவில்லையா?

பதினைந்து பட்டதாரி மாணவர்களையும் வெளியேற்றிவிடுவதன் மூலம் பல்கலைக்கழகத்தில் நிலைமை சீரடைந்துவிடுமா? பதினைந்து மாணவர்கள் மீதும் தவறு இருக்கலாம். தவறு செய்வது மனித இயல்பு. தவறை உணர்ந்து திருந்த வேண்டும்; தவறை உணர்ந்து திருந்துவதற்குச் சந்தர்ப்பமும் அளிக்க வேண்டும். பதினைந்து மாணவரும் திருந்துவதற்குச் சந்தர்ப்பமளிப்பதன் மூலம் மற்றையோரும் தம்மைத் திருத்திக் கொள்ள சந்தர்ப்பமளிப்பதாகும்.

குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டியது தானென்றாலும் மாணவர்களைத் தண்டிப்பதன் மூலம் மட்டும் தான் பல்கலைக்கழகத்தைச் சீர்திருத்தலாமென நினைப்பது சரியாகாது. பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் கடந்தகாலச் சம்பவங்களை உணர்ந்து அந்த அனுபவத்தின் மூலம், தாங்களே தங்களைத் திருத்தி அதன்மூலம் மாணவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும்.

விசாரணைக் கமிஷன் சிபார்சுகளை விரைவில் அமுல்நடத்த அரசாங்கம் முன்வர வேண்டியது அவசியம்தான். இதேசமயம் உப அத்தியட்சகர்களும், போதனாசிரியர்களும் மாணவர்களும் தங்கள் தவறை உணர்ந்து, திருந்தி பல்கலைக்கழகம் சீராக நடைபெற ஒத்துழைக்க வேண்டும்.

இதேசமயம் பல்கலைக்கழக இட நெருக்கடிதான் பல்கலைக்கழக துரதிர்ஷ்ட சம்பவங்கள் அனைத்துக்கும் மூலகாரணம் என்பதை அரசாங்கம் உணர வேண்டும். இப்பிரச்னைக்கு கொழும்பில் ஒரு புதிய பல்கலைக்கழகம் அமைப்பதன் மூலம் மட்டுமோ தகுதியிருந்தும் இடவசதியில்லாத காரணத்தால் மாணவர்களுக்கு அனுமதியளிப்பதன் மூலமோ தீர்வு காணலாம் என்று அரசாங்கம் நினைத்தால் அது பெருந்தவறாகும். யாழ்ப்பாணத்திலும் மற்றும் இடங்களிலும் பல்கலைக்கழகங்கள் அல்லது பல்கலைக்கழகப் பிரிவுகள் நிறுவுவதே சிறந்த வழி என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

## "ஊழலைகளை அகற்றவேண்டும்"

பம்பலப்பிட்டி, திங்கள்

'கூட்டுறவு இயக்கத்தில் சில தீய சக்திகள் நுழைவதால் இந்த இயக்கம் பொது மக்களால் இழித்துரைக்கப்படவேண்டி நேரிடுகிறது. கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல்களை அகற்றி அதைப் புனிதப்படுத்துவது அரசாங்கத்தின் கடமை' என ஜனப்பிரதிநிதிகள்சபை சபாநாயகர் சேர் அல்பேர்ட் பீரிஸ் கட்டுநேரியாவில் புதிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கட்டடமொன்றைத்திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

## அக்டோபரில் அடுத்த "கிரகம்"

பாரிஸ், பெப். 21

பிரான்ஸ் தனது நான்காவது செயற்கைக் கிரகத்தை அக்டோபரில் அனுப்பிவைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பி. டி. ஸி.)

# இராமரும் கிருஷ்ணருமான பகவான் ராமகிருஷ்ணர்

— சுவாமி சர்வாதீதானந்தா —

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 131-வது ஜயந்தி இன்று கொண்டாடப்படுகிறது.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ் தேவர் உலக மக்கள் மகாமாயையில் அகப்பட்டு தங்கள் வாழ்நாள் முழுவதையும், அல்லல் படுத்தும் அற்ப மாயையிலே விணே விரையம் செய்து மாண்டு போகா வண்ணம் காப்பாற்றுவதற்கே திருஅவதாரம் செய்தார். சமய நெறிகளை மேற்கொண்டு கடவுளை அடையும் சன்மார்க்கத்தையும் தர்ம வாழ்க்கையையும் மக்களுக்கு தகுந்த முறையில் எல்லாச் சமயங்களையும் போற்றி அதன்படி ஒழுகுதலே மானிடப்பிறவியின் பூரண நோக்கம் என வாழ்ந்து காட்ட முயன்றார். ஞானம், பக்தி, கர்மம், யோகம் ஆகிய நெறிகளில் முற்றும் சிறந்ததும், கலியுகத்திற்கு உகந்ததும் பக்தியோகம்தான் என்று உய்த்து உணர்ந்து, தாமும் அந்நன்னெறியில் நின்று அனுபவித்து வெற்றியும் ஈட்டி அதையே அனைவரும் கடைபிடிக்கும்படி உபதேசித்தார்.

பரமஹம்ஸர் காமினி, காஞ்சனம் ஆகிய இரண்டையும் முற்றும் துறந்தவர். இவ்விரண்டையும் முற்றாக நீக்க வேண்டும் என்று குருதேவர் தம்சீடர்களுக்கு பன்முறை அறிவுறித்தியிருக்கின்றார். பெண் எல்லாம் பாரத மாதாவின் தெய்வ சொரூபம் என்றுதான் அவர் கருதிவந்தார். சாரதமணிதேவியாரையும் அவர் கணப்பொழுதேனும் தமது இல்லாளாகவோ அல்லது சாதாரணப் பெண்ணாகவோ எண்ணி நடந்ததில்லை. அவரைத் தாம் வழிபாடியற்றும் ஜகன் மாதாவின் திவ்விய சொரூபம் என்று நினைந்தே வழிபாடு செய்து வந்தார். இதிலிருந்து பரமஹம்ஸருடைய உலகப்பற்றற்ற தன்மையும், தெய்வ சிந்தனையும் எத்தகைய உன்னத நிலையடைந்துள்ளது என்பது புலனாகின்றது. ஒளித்திருந்து குருதேவரை பரீட்சிக்க முனைந்த சுவாமி விவேகானந்தர்கூட வெட்கி நாணமடைந்து குருதேவரிடம் சரண் புகுந்தனர்.

பக்திமார்க்கத்தைப் பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது சீடர்களுக்கு பகர்ந்தாவது: "ஒரு பக்தனின் இருதயமானது உலர்ந்த நெருப்புக்குச்சி போன்றது. இறைவனின் நாமத்தை கேட்ட மாத்திரத்திலே அவன் இருதயத்திலுள்ள அன்பு என்னும் அனலானது கொளுந்துவிட்டெரியத் தொடங்குகின்றது. காமத்திலும், உலோபத்திலும் உழலும் கயவனது மனமோ ஈரமுள்ள நெருப்பு குச்சி போன்றது. என்னிறைந்த முறை இறைவனைப் பற்றிய உண்மைகளை உபதேசித்தாலும், அவன் மனம் உலக விஷயங்களை விட்டு இறைவனிடம் பக்தியைச் செலுத்தாது"

"கிருஷ்ணனும் ராதையும் பகவானின் திருவவதாரங்கள் என்று நம்பினால் நம்பட்டும், நம்பாமல் போனால் போகட்டும். ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள் இவர்களைப் போல கடவுளின் அவதாரங்களை நம்பினாலும் நம்பலாம். அன்றேல், தற்காலத்து பிரம்ம சமாஜத்தாரைப் போல கடவுளின் அவதாரத்தை அடியோடு மறுத்தாலும் மறுக்கலாம், எப்படியிருந்தாலும் [illegible]க்கும் இறைவனிடத்தில் நிறைந்த பக்தி அல்லது அனுக்கிரகம் பெறும் ஆவல் மட்டும் ஏற்படட்டும். இந்த நிறைந்த அன்பு மட்டுமே ஒருவனுக்கு வேண்டுவதாகும்"

மேலும் ஸ்ரீராமக்கிருஷ்ணர் ஆத்மா சரீரத்தினின்றும் வேறுபட்டதென்பதை ஒரு உதாரணத்தின் மூலமாக விளக்குகின்றார்.

"ஒரு சமயம் வியாச தேவர் யமுனை ஆற்றைக் கடக்க விரும்பினார். சில கோபிகாஸ்திரிகள், பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றை தலையில் தாங்கிக் கொண்டு அவர்கள் ஆற்றைக் கடக்க அங்கு வந்தனர். ஆனால் அச்சமயம் படகு தயாராயில்லை. எப்படி அக்கரைக்கு செல்வது என்று அவர்களுக்கு தெரியவில்லை வியாச தேவருக்கோ பசி மிகவும் அதிகமாயிருக்க நேரிட்டதால் கோபிகள் தங்களிடம் இருந்த பால், வெண்ணெய் முதலியவற்றைக் கொடுத்தார்கள். அவரும் அவையனைத்தையும் சாப்பிட்டார். பிறகு அவர் யமுனையைப் பார்த்து, "யமுனா நதியே, நான் யாதொன்றும் சாப்பிடவில்லையென்பது உண்மையாயின் உன் ஜலமானது பிரிந்து எங்களுக்கு போக வழிவிடுவதாக?" என்றார். இவ்வாறு அவர் சொன்ன மாத்திரத்தில் யமுனா இரண்டாகப் பிரிந்து நடுவில் வழிவிட்டுக் கொடுத்தது. அதன் வழியே வியாச தேவரும் கோபிமாரும் அக்கரைக்கு நடந்து சென்றனர். "நான் யாதொன்றும் சாப்பிடவில்லை என்பது தான் சுத்த ஆத்மா" என்பதன் கருத்து: அதாவது யாதொன்றிலும் பாதிக்கப்படாதது பாகிருதிக்கு அப்பாற்பட்டது என்பதாம். "சுத்தாத்மன் தாகம் பசியிரண்டும் அற்றவன். அவனுக்கு ஜனன மரணமும் இல்லை. அவனுக்கு கால அளவு என்பது இல்லை. அவன் அழிவற்றவன். ஆதலின் எவன் இந்த ஞானத்தை அடைந்திருக்கின்றானோ அவன் ஜீவன் முக்தன். அவன் இந்த ஆத்மா சரீரத்தினின்றும் முற்றும் வேறானதொன்று என்று உணர்கின்றான். ஒவன் கடவுளை அடையும் பொழுது தன் சரீரமும் ஆத்மாவும் ஒன்று என்று நினைக்கும் மாயையினின்றும் விடுபட்டவனாகின்றான். அவையிரண்டும் வெவ்வேறானவை என்று அவன் உணருகின்றான். எப்படி ஒரு தேங்காயில், அதனுள்ளிருக்கும் பால் சுண்டிப் போனபிறகு கொப்பறாவும் அதன் சிரட்டையும் வெவ்வேறாகப் பிரிகின்றது அதுபோலவே ஆத்மாவும் சரீரமும் வெவ்வேறானவை என்று அறிகின்றான்.

ஸ்ரீராமகிருஷ்ணர் உயர்ந்த தெய்வத்தன்மை வாய்ந்த மகாபுருஷராவார். உலகில் தோன்றியுள்ள பெரும் சமய நெறிகளை நிலைநாட்டிய தெய்வததன்மைவாய்ந்த பெரியார்களினது இயல்புகள் அத்தனையும் ஒருங்கே கொண்டு முற்காலத்தில் இராமராகவும், கிருஷ்ணராகவும் சென்ற நூற்றாண்டில் இராமகிருஷ்ணராகவும் தோன்றியுள்ளார் என்பது இவரின் வாழ்க்கையிலே நன்கு விளங்குகின்றது.

சுவாமி விவேகானந்தர் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி பின்வருமாறு கூறினார்.

'இந்தியாவில் தோன்றிய பழைய தர்மமார்க்கங்கள் அத்தனையும் சேர்ந்து ஒரு [illegible]வாகியவரே இவர். இவருடைய வாழ்க்கை

(5-ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

நவாலியில் சில நாட்களுக்கு முன்பு ஒரு கிறிஸ்தவ கோவிலில் இருந்த ஆலயமணியை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்கள். வெண்கலத்தால் செய்யப்பட்ட அந்தமணி ஐந்நூறு ரூபாய் பெறுமதியானதென்று கூறப்படுகிறது. இதுபோன்ற ஒரு பெரியமணியைத்திருடி எவரும் அறியாமல் அதை விற்கக்கூடியவர்கள் திட்டமிட்டு பெருமளவில் திருடக்கூடிய பெரிய புள்ளிகள். அதே ஊரில் நேற்று முன்தினம் சிந்தாமணிப்பிள்ளையார் கோவிலுக்குள் யாரோ இனம் தெரியாதவர்கள் ஓட்டைப் பிரித்து இறங்கி உண்டியலை உடைத்துப் பார்த்தார்கள். ஒருசத இரண்டுசதசில்லறைகள் தரையில் தூவப்பட்டுக் கிடந்தன. கால் ரூபாய் அரைரூபாய் நாணயங்கள் களவுபோயிருக்கலாம் உண்டியலுக்குள் இருந்த தொகை எவ்வளவென்று எவருக்கும் தெரியாதல்லவா? இதே கோவில் சுமார் ஒரு மாதத்துக்குமுன்னும் சூறையாடப்பட்டதென்பது குறிபிடத்தக்கது. அந்தச்சமயத்திலும் உண்டியலுக்கு மட்டுமே ஆபத்து நேர்ந்திருக்கிறது. கோவிலிலுள்ள விக்கிரகங்களுக்கு சூட்டப்படும் ஆபரணங்கள், விலையுயர்ந்த கிரீடம் முதலியனவும் குத்துவிளக்குகளும் நல்ல வேளையாக கோவிலுக்குள் வைக்கப்படாமல் வேறிடத்தில் பத்திரமாய் இருந்து விட்டன. இந்தமாதிரி சில்லறை திருட்டுகளில் ஈடுபடுவர்கள் சிகரெட்டுக்கும் சினிமா பார்ப்பதற்கும் வகையறியாத படித்த வாலிபர்களும் படிக்காத காளையர்களும் என்று ஊகித்துக்கொள்ளலாம்.

கொக்குவிலில் சென்றவருடம் திடீரென்று காணமற்போன ஒரு விநாயகவிக்கிரகம் மர்மமான முறையில் இவ்வருடம் மீண்டும் கோவில் வாசலில் வந்து வீற்றிருந்தசெய்தியை சென்றவாரம் கேள்விப்பட்டோம். ஆயிரம்ரூபாய் பெறுமதியான விநாயகர் திரும்பி வந்துவிட்டார் என்றசெய்தி ஆஸ்திகருக்கு அளவிடாத மகிழ்ச்சியையும் நாஸ்திகருக்கு நம்பமுடியாத ஆச்சரியத்தையும் விளைவித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஒரு கோவிலில் இப்படிப்பட்ட அதிசயங்கள் நிகழ மற்றக்கோவில்களில் தெய்வங்கள் வாயை மூடிக்கொண்டிருப்பது விபரீதமாயிருக்கும்தான். ஆனால் கூர்ந்து பார்க்கப்போனால் கடவுளே ஒரு மர்மம் நிறைந்த சக்தியல்லவா? அந்த சக்தியின் லீலா விநோதங்களை அளப்பிடக்கூடிய மானிடர் யார்?

, ஜனத்தொகையும் வேலையில்லாத் திண்டாட்டமும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டேவர களவுகளும் கொள்ளைகளும் அதேவிதத்தில் பெருகி வருகின்றன. இளம் மட்டங்கள் போடுவதற்கு நைலோன் சேட்டும், பிடிப்பதற்கு திறீரோஸும் சுவைப்பதற்கு நல்ல சாப்பாடும் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு அநாதரவாய்க் கிடக்கும் கோயில்களும், ஆண்களில்லாத வீடுகளும் வசீகரமான கவர்ச்சிகளாய்த் தோன்றும். ஆற்றொணாக கஷ்டத்தின் நிமித்தம் அவர்கள் தைரியமாகத் திருட்டுத் தொழிலில் இறங்கிவிடுகின்றார்கள். இதைத் தடுப்பதற்கு வழியென்ன?

பொலிஸ்ஸ்டேஷன் இருக்கும் இடங்களில் இரண்டு பொலிஸ்காரர் இரவில் ரோந்துவரும் வழக்கத்தை தீவிரமாக அமுல்நடத்த

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் வியட்னும: கலப்பு அரசு சாத்தியமில்லை

## செனட்டர்கென்னடி யோசனையை உயர் அதிகாரிகள் நிராகரித்தனர்

வாஷிங்டன், பெப். 21

வியட்னும் நெருக்கடி சம்பந்தமாக செனட்டர் ரொபர்ட் கென்னடி வெளியிட்ட யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமெரிக்க உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வியட்னும் சம்பந்தமாகசமாதானம் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு முன்னர், கம்யூனிஸ்டுகளை (வியட்காங்கியரை)யும் கொண்ட கலப்பு அரசாங்கமொன்று தென்வியட்னுமில் அமைப்பதற்கு அமெரிக்கா இணங்க வேண்டும் என்று செனட்டர் கென்னடி யோசனை தெரிவித்திருந்தார்.

### ஏற்கனவே பரிசீலனை செய்யப்பட்டது

அமெரிக்க ராஜாங்க உதவிக் காரியதரிசி திரு. ஜோர்ஜ்போல், நேற்று இது பற்றிக் கருத்து வெளியிடுகையில்; செனட்டர் ரொபர்ட் கென்னடி தெரிவித்திருந்த யோசனை ஏற்கனவே பரிசீலனை செய்யப்பட்டு அதிபர் ஜோன்ஸனினுல் நிராகரிக்கப்பட்டது என்று கூறினுர்.

தென்வியட்னுமில் கம்யூனிஸ்டுகளையும் கொண்ட கலப்பு அரசாங்கம் நிறுவப்பட்டால், அது கம்யூனிஸ்டு நாடாகிவிடுவதுடன் மற்றைய நாடுகளுக்கும் இது பரவக்கூடியதாக விருக்கும் திரு. ஜோர்ஜ் எச்சரித்தார்.

### பண்டி கருத்து

அமெரிக்க அதிபர் திரு. ஜோன்ஸனின் ஆலோசகர்களில் ஒருவரான திரு. பண்டி இதுபற்று அபிப்பிராயம் தெரிவிக்கையில்; வியட்காங்கியரைக்கொண்ட கலப்பு அரசாங்கம் தென்வியட்னுமுக்குச் சாத்தியமாகாது என்று கூறினுர்

கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்துகொண்டு சமாதானவழியில் செல்லமுடியாது என்றும் திரு. பண்டி நம்பிக்கை தெரிவித்தார்.

### ஹம்ப்ரி ஊர்ஜிதம்

அமெரிக்க உபஜனுதிபதி திரு. ஹம்ப்ரி நேற்று வெலிங்டனில் இதுபற்றித் தெரிவிக்கையில் கலப்பு அரசாங்க யோசனை சாத்தியமில்லை என்று குறிப்பிட்டா...

## அல்லாவின் ஆணையின்றி யுத்தத்தில் ஈடுபடேன்

### இராணுவ அழைப்புக்கு காஸியஸ்கிளே கைவிரிப்பு

நியுயோர்க், பெப் 21

இராணுவத்தில் சேர்ந்து தம்மால் யுத்தம் செய்யமுடியாது என்று உலக அதிபார குத்துச்சண்டை வீரர் காஸியஸ்கிளே அறிவித்துள்ளார்.

''நான் உண்மையான ஒரு முஸ்லிம். ஏன் நான் யுத்தம் புரிய வேண்டும்'' என்று அவர் கேட்கிறுர்.

''முஸ்லிம் சமுகத்தைச் சேர்ந்த நான் யுத்தத்தை வெறுக்கின்றேன். அல்லாஹ்விடமிருந்து ஆணை கிடைக்காதவரை நாங்கள் யுத்தத்தில் இறங்க முடியாது'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

காஸியஸ்கிளேயின் வழக்கறிஞரான எட்வேர்ட் ஜாக்கோ தெரிவிக்கையில், இராணுவத்தில் சேருமாறு கிளேக்கு அழைப்பு வந்ததென்றும் அவர் இராணுவத்தில் சேர்ந்தால் வியட்னுமுக்குச் சென்று அமெரிக்கப் படைகளுடன் சேர்ந்து கொண்டு வியட்காங்கியருக்கு எதிராகச் சண்டையிடலாம் என்று கூறினுர்.

சிகாகோ தினசரிப் பத்திரிகையொன்றின் நிருபர் ஒருவர், மியாமியாவிலுள்ள பயிற்சி முகாமிலிருந்த காஸியஸ் கிளேயை டெலிபோனில் அழைத்துப் பேட்டி கண்டார். அப்பொழுது தான் கிளே மேற்கண்ட விஷயங்களைத் தெரிவித்தார்.

வெள்ளையர்களும் சில அமெரிக்க காங்கிரஸ்காரர்களும் யுத்தத்துக்கு எதிர் என்றுல் ஏன் முஸ்லிம்களாகிய நாங்கள் இதில் ஈடுபட வேண்டும்'' என்று கிளே கேட்டார். (பி.டி.ஸி.)

## "மலேசியா நசுக்கும் கொள்கை வலுப்பெற்றுள்ளது"

ஜாகர்த்தா, பெப். 21

''மலேசியாவுடன் பிலிப்பைன்ஸ் சேர்ந்து கொண்டது, இந்தோனேஷிய எதிர்ப்புக் கொள்கையைப் பலமடையச் செய்திருக்கிறது'' என்று இந்தோனேஷிய வெளிநாட்டுமந்திரி டாக்டர் சுபந்திரியோ தெரிவித்துள்ளார்.

மலேசியத் தகராற்றைச் சுமுகமாகத் தீர்த்துவைக்க, இது முட்டுக்கட்டையாக இருக்கும் என்று சுபந்திரியோ தெரிவித்தார்.

மலேசியாவுடன் பிலிப்பைன்ஸ் சேர்ந்து கொள்வதன்மூலம் மலேசியா நசுக்கும் கொள்கையும் வலுப்பெற்றிருக்கிறது என்றும் அவர் எச்சரிக்கை செய்தார்.

## சீனுவினுல் எமக்கு ஆபத்தில்லை!

### ஹம்ப்ரி கருத்துக்கு பூட்டோ மறுப்பு

கராச்சி, பெப். 21

"கம்யூனிஸ்ட் சீனுவினுல் பாகிஸ்தானுக்கோ அல்லது ஆசிய உபகண்டத்துக்கோ ஆபத்தில்லை என்றே பாகிஸ்தான் கருதுகிறது" என்று பாக் வெளிநாட்டு மந்திரி திரு. சூல்பிகார் அலி பூட்டோ தெரிவித்துள்ளார்.

கம்யூனிஸ்ட் சீன அபாயத்தை பாகிஸ்தான் உணர்ந்திருக்கிறது என்று அமெரிக்க உப அதிபர் ஹம்ப்ரி வெளியிட்ட கருத்தை பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி மறுத்துள்ளார்.

பாகிஸ்தானின் நோக்கைத் தவறுகப் புரிந்து கொண்ட ஹம்ப்ரி அபிப்பிராம் தெரிவித்துள்ளார் என்று பூட்டோ கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியா தலைநகர் கான்பராவுக்கு உப அதிபர் திரு. ஹம்ப்ரி அண்மையில் விஜயம் செய்திருந்த பொழுது; சீன அபாயத்தை இந்தியாவும் பாகிஸ்தானும் நன்கு உணர்ந்திருக்கிறது என்று நிருபர்களிடம் தெரிவித்தார். இருநாடுகளும் பொருளாதாரத் துறையில் மிகவும் முன்னேற்றமடைய வேண்டுமென்றும் வெளியார் பயம் இருநாடுகளுக்கும் இருக்கிறது என்றும் உப அதிபர் ஹம்ப்ரி கூறியிருந்தார்.

இதனை மறுத்து திரு. பூட்டோ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

''திரு. ஹம்ப்ரியின் கருத்து எனக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. சீனுவின் ஆபத்தை பாகிஸ்தான் உணர்ந்திருக்கிறது என்று அவர் தெரிவித்திருப்பது பாகிஸ்தானின் நிலையையே மாற்றுவதாக இருக்கிறது. சீனுவினுல் இந்திய, பாகிஸ்தான் உபகண்டத்துக்கு ஆபத்தில்லை. எமக்கு ஆபத்து எதுவும் ஏற்படும் என்றும் நாம் கருதவில்லை.'' என்று திரு. பூட்டோ தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## மாஸ்கோவில் வில்ஸன்

மாஸ்கோ, பெப். 21

இன்று மாஸ்கோ வந்து சேரும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன், வியட்னும் நெருக்கடி குறித்தும் படைக்குறைப்பு பற்றியும் சோவியத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு அவர் மூன்று தினங்கள் தங்கியிருப்பார்.

## தென் வியட்னுமுக்கு அதிக துருப்புகள்

கான்பரா, பெப். 21

தென்வியட்னுமுக்கு ஆஸ்திரேலியா அதிகமான துருப்புகளை அனுப்பும் என்று ஆஸ்திரேலிய பிரதமர் திரு. ஹரோல்ட் ஹோல்ட் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் பத்திரிகை நிருபர்களுக்கு தெரிவிக்கையில், தென்வியட்னுமுக்கு அதிகமான துருப்புகளை அனுப்புவது குறித்து அரசாங்கம் இன்னும் தீர்க்கமாக முடிவு செய்யவில்லை என்று கூறினுர். (பி.டி.ஸி.)

## 'பட்டினியால் மக்கள் சாகமாட்டார்கள்'

### சுப்ரமண்யம் நம்பிக்கை

சென்னை, பெப். 21

''சில அமெரிக்க பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள்போல, இந்தியாவில் பட்டினி காரணமாக எவரும் சாகமாட்டார்கள்'' என்று மத்திய உணவு மந்திரி திரு. எம் சுப்ரமண்யம் தெரிவித்துள்ளார்.

இங்கு பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில்தான் அவர்மேற்கண்ட விபரத்தை வெளியிட்டார்.

''பட்டினி காரணமாக இந்நாட்டில் எவரும் பலியாகமாட்டார்கள் என்பது எனது நம்பிக்கை. தற்போதைய உணவு நெருக்கடி கடந்த எழுபதுவருடங்களில் மோசமானது'' என்று திரு. சுப்ரமண்யம் கூறினுர்.

''வெளி நாடுகளிலிருந்து அதிகமான உணவு தானியங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. இந்த உணவு நெருக்கடி சிலமாத காலத்துக்குள் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கலாம். இம்மாதத்தில்மட்டும், எட்டுலட்சம் தொன் கோதுமை விநியோகிக்கப்பட்டிருக்கிறது. மார்ச்மாதத்தில் பத்து லட்சம் தொன் கோதுமை விநியோகிக்கப்படும்'' என்றும் அவர் கூறினுர்.

(பி. டி. ஐ.)

## "அணு ஆயுத போர் மூள்வதை தவிர்க்க வேண்டும்"

புதுடில்லி, பெப். 21

அணு ஆயுதப் போர் ஒன்று மூள்வதை தவிர்ப்பதில் மண்டல சார்பாற்ற நாடுகள் ஒத்துழைக்கவேண்டும் என்று ஹங்கேரிப் பிரதமர் திரு. சலாய் கோரியுள்ளார்.

இந்தியாவில் எட்டு நாட்கள் விஜயம் செய்யும் பொருட்டு பிரதமர் சலாய் நேற்றுப் புதுடில்லி வந்து சேர்ந்தார்.

ஹங்கேரிப் பிரதமரைக் கௌரவிக்குமுகமாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்றிரவு விருந்தொன்றளித்தார்.

அப்பொழுது பிரதமர் இந்திராகாந்தி பேசுகையில், ஹங்கேரிக்கும் இந்தியாவுக்குமிடையே நீண்ட காலமாகத் தொடர்புகள் இருந்திருக்கின்றன என்றும் இருநாடுகளுக்குமிடையே விஞ்ஞான, தொழில் நுட்ப கலாச்சார ஒத்துழைப்பை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துவோம் என்றும் கூறினுர்.

ஹங்கேரிப் பிரதமர் திரு. கலாய் அப்பொழுது பேசுகையில், இந்தியா பல துறைகளில் முன்னேறியிருக்கின்றது என்றும் உலக சமாதானத்துக்கு அது ஆற்றிவரும் தொண்டு பாராட்டக்கூடியது என்றும் கூறினுர்.

உலக சமாதானத்தைக் கட்டிக்காப்பதில் மண்டல சார்பற்ற நாடுகள் ஒத்துழைக்கவேண்டும் என்றும் கூட்டுமுயற்சியின் மூலம் இதனைத் தவிர்க்கலாம் என்றும் அவர் கூறினுர்.

## நந்தா-காமராஜர் ஆலோசனை

புதுடில்லி, பெப். 21

உள்துறை மந்திரி திரு. குல்ஸாரிலால்நந்தா நேற்று காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜரைச் சந்தித்து சில விஷயங்கள் குறித்து ஆலோசனை நடத்தினுர்.

பஞ்சாபிசுபா பற்றி அவர்கள் ஆலோசித்ததாகச் சொல்லப்படுகிறது.

## வீதி விபத்துக்கள்: 12,335 பேர் பலி

பாரிஸ், பெப். 21

கடந்த வருடத்தில்பிரான்ஸில் நிகழ்ந்த வீதிவிபத்துக்களில் 12,335 பேர் உயிரிழந்திருக்கின்றனர். இத்தொகை முந்திய வருடத்திலும் பார்க்க பத்துவீதம் அதிகமாகும். காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 3,00,000 (பி.டி.ஸி.)

## இந்திய கிராமிய வாழ்க்கையை கண்டறியும் கல்லூரி மாணவி

நியுயோர்க், பெப். 21

இந்தியக் கிராமமொன்றில் சிறிதுகாலம் தன்னந்தனியாக வாழ்க்கை நடத்தி அங்குள்ள மக்களின் நிலைமையைக் கண்டறியும் பொருட்டு 17 வயதுள்ள பாடசாலை மாணவி ஒருத்தி இங்கிருந்து பம்பாய்க்குப் பயணமாகியுள்ளார்.

பார்பரா டிறென் என்ற இந்த மாணவி, உயர்தர பாடசாலையொன்றைச் சேர்ந்தவர். இவரின் தந்தை ஒரு டாக்டர். இப்பாடசாலை சில வியாபார சங்கங்களினுல் நடத்தப்படுகிறது.

இவர், பம்பாயிலிருந்து 450 மைல் தூரத்திலுள்ள காலட் எனும் கிராமத்தில் (குஜராத் ராஜ்யம்) சுமார் மூன்றுவாரகாலம் தனிமையாகத் தங்கியிருந்து அங்குள்ள மக்களின் நிலையைக் கண்டறிவார். குறிப்பாக அந்த மக்களின் வைத்திய வசதிகளிலேயே இவர் அதிகம் கவனம் செலுத்துவார். பார்பரா தம்முடன், 1000 அஸ்பிரின் மாத்திரைகளையும் 2000 விட்டமின் மாத்திரைகளையும் எடுத்துச் சென்றுள்ளார்.

செல்வி. பார்பரா ஏற்கெனவே நைஜீரியா, பெரு, எதியோப்பியா ஆகிய நாடுகளுக்கும் இப்படியான 'கிராமவிஜயம்' செய்துள்ளார். இவரது சுற்றுப் பயணத்தின்பின்னர் அந்தப் பகுதி மக்களின் தேவைக்கேற்ப வைத்திய உதவிகள் அளிக்கப்படும்.

(பி. டி. எபி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

மீசாலை, திங்கள்

வட இலங்கை சங்கீத சபை 1966-ம் ஆண்டு நடத்திய பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விபரம்:-

### கொழும்பு

**வாய்ப்பாட்டு முதலாவது ஆண்டு**

ஜெ திருச்செல்வி, மு ஜெயதேவி, க சுவாஜனி, ஜொ பிறெஷெல்லா, சு கலைவாணி, ந சகுந்தலா. அ ஜெகதாம்பாள், எஸ் ராதா, ஸ்ரீ இராசலட்சுமி, நா மகாலட்சுமி, வி மகேஸ்வரி, வி பத்மாவதி. எம் பாலசுப்பலெட்சுமி, நா சாவித்திரி, எஸ் அம்பிகா, தி சாந்தா, என் உஷா, தி பாணமதி, ர ஆனந்தலெட்சுமி, சு தேவராணி, எம் லோகாம்பிகை, எம் ஹ்ரேஸ் மேரி, க சாந்தகுமாரி, சு சிவாணி.

### இரண்டாவது ஆண்டு

சு சுந்தரராணி, எஸ் கணநாதன், பத்மாசனி, ம இராசலட்சுமி, லலிதாம்பிகை, ந ரேணுகா, சி வசந்தா, க உபசகாந்தி, ந வாசுகி, ர கமலா, யோ மேரி பிரேமிளா, தி பாமதி,

### மூன்றும் பகுதி

கு சிவநாயகி, அ அருந்ததி, சு வந்தசலாதேவி, மு வசத்தகுமாரி, ரா அனபெலாரஞ்சினி, ச சிவநாயகி, நா. மனோகரி.

### நான்காம பகுதி

வே சுலோசனா, அ ஏகஇருங்கேஸ்வரி, சு நிரஞ்சனி

### ஐந்தாம் பகுதி

த இந்திரா, ந மங்கையர்க்கரசி

வீணை: கொழும்பு

### முதலாவது ஆண்டு

ந ஈஸ்வரி, பா வஸ்தலா, பா சரஸ்வதி, சந்திரலேகா

### இரண்டாவது ஆண்டு

இ வசந்தா, ம உமா ஹோலதி, ம கௌரி, நாராயணி.

### மூன்றும் பகுதி

க நகுலேஸ்வரி, சி மங்களேஸ்வரி, மு சுபோதினி, கு பிரிந்தா, ப ரஞ்சினி.

### நான்காம் பகுதி

க திலகவதியார், செ கௌரி மனோகரி, க முத்துலட்சுமி

புல்லாங்குழல்: கொழும்பு

### இரண்டாம் பகுதி

கே ரஞ்சன், ம இராசலட்சுமி.

### நான்காம் பகுதி

ச. ஸ்ரீகாந்தா.

### வயலின், கொழும்பு

முதலாவது ஆண்டு: க. வசந்தகுமாரி, அ. ஜெகதாம்பாள், எம். பாலசுப்பலட்சுமி, ரா. ஜெயந்தி, சி. சுசிலா, ரி. கே. வயோகினி.

இரண்டாவது ஆண்டு: ம. சாந்தினி, சு. லலிதாம்பிகை, க. ரவீந்திரன், சி. கனகேஸ்வரி, ச. காஞ்சனா.

### வாய்ப்பாட்டு திருக்கோணமலை

முதலாம் பகுதி: து. ரங்கநாயகி, ந கீதா சாந்தி, வ. அமிர்தநாயகி, வி. கமலாதேவி, ச. பிரேமளா, ஞா. தையல்நாயகி, ந. செல்வரஜனி, சுந்தரவல்லி, பொ. சரோஜினி சந்திரா.

இரண்டாம் பகுதி: மு. செல்வமணி, க லலிதாதேவி, சு. மஞ்சுளாதேவி, க சரோஜாதேவி, இ விஜயகுமாரி, ச. யோகாம்பிகை, சி சாந்தினி, சு பசுமதி, மா. புஷ்பராணி.

மூன்றும் பகுதி: பொ நிர்மலாதேவி, ச இராஜேஸ்வரி, கா பத்மசோதி (வீணை) அ கமலாதேவி, அ. அமிர்தநாயகி (வயலின்)

மூன்றும் பிரிவு: க சந்திரவதனா, கு வனிதா.

நான்காம் பகுதி: சி விஜயலெட்சுமி, இ மிசலகுமாரி, சி புவனேஸ்வரி, ந செல்வமகள் (வீணை).

ஐந்தாம் பகுதி: ம தேவிகராணி (வயலின்).

ஆசிரியர் பகுதி: சி. இராகுமாரி.

### வாய்ப்பாட்டு பருத்தித்துறை

முதலாம் பகுதி: க கமலனி, க ஞானரூபி, வே புவனேஸ்வரி, சி. அருந்ததி, ஐ சிவபாக்கியம், க மங்கையர்க்கரசி, சி சிவஞானசுந்தரி, சி பேரின்பநாயகி, க. புவனேஸ்வரி, த கேதாரகௌரிதேவி, மா பூமணி, சி சரோஜினிதேவி, இ பிரேமஜயந்தி. இ சரஸ்வதி (வயலின்)

இரண்டாம் பகுதி: க குமுதவல்லி, பி ஜெகதேவி, இ ரஞ்சிதமலர் (வயலின்), இ மாதினி, வி இந்திராதேவி, சி யோகேஸ்வரி, பீ நிர்மலாதேவி.

மூன்றும் பகுதி: வே சகுந்தலாதேவி, சி நவரத்தினம்.

நான்காம்பகுதி: பி பத்மாவதி, க கருணாகரன், மு யோகரஞ்சிதம், ந சுபத்திராதேவி, மு யோகசௌந்தரி.

ஐந்தாம் பகுதி: தி ஞானேஸ்வரி, கு சூரியகுமாரி.

ஆசிரியர் பகுதி: இ அன்னபூஷணம், சு சிவநாயகி.

### மல்லாகம் வாய்ப்பாட்டு முதலாம்பகுதி

அ மாலினி, அ ஞானேஸ்வரி, பொ திருக்குமாரன், அ மனோரஞ்சன், க சிவபானி, ரி கமலாவதி, சு கமலராணி, அ புவனேஸ்வரி, அ ராஜேஸ்வரி, சு கலைவாணி, பொ விமலாதேவி, ச உமாதேவி, கு பவளராணி, செ மணிக்கொடி, இ கௌதமி, வி அருந்ததி, பொ யசோதா, கு கௌரி மனோகரி, செ செல்வசெந்தி, சு. வாசுகிதேவி, த சித்திரலோகா, ச மாலதி, வே. சரோஜா, து சுஜனி, சி சுகாஷனி, எஸ் யெ நிரூஜனி, இரோகிணி. அ தேவமலர், செ லீலாவதி, செ இந்திராணி, ந சாந்தினிதேவி, பி அமிர்தகலை (வயலின்). செ இராசதேவி (வயலின்), பி ஞானகலை (வயலின்), சி பிரானனை (வயலின்), சு வரதராஜன் (வயலின்), வி சந்திரகாம்பாள், வி. ஜனகி, செ. சுலோசனா.

### இரண்டாம் பகுதி

வி சுந்தரமூர்த்தி வி சிவதாசினி, வி சிவஞானசேகரம், இ தேவகி. அ யோகாம்பிகை, ச இரஞ்சிதமலர், வி சந்திராதேவி, நா நிர்மலாதேவி, நா கலாதேவி க சிவரூபி; இ சரஸ்வதி, ந அசோக்குமார், ந சிவாஜினி, இ பிரேமாவதி, சு தேவகி, வி வனஜாம்பாள், ச சரோஜினிதேவி, அ சினகங்காதேவி (வயலின்), அ இந்திரமதி, ந தங்கலட்சுமி, சே கேசவமூர்த்தி.

### மூன்றும் வகுப்பு

மா சந்திரகாந்தி, வி சிவதாசன். வி திருஞானசேகரம், இ தேவகி, அ யோகாம்பிகை. ச சந்திராதேவி, நா கமலாதேவி. வி இரஞ்சிதமலர், நா நிர்மலாதேவி, க சிவரூபி, இ சரஸ்வதி, நா அசோக்குமார், ந சிவாஜினி, இ பிரேமாவதி, சு தேவகி வி. வனஜாம்பாள், ச சரோஜினிதேவி, அ சிவகங்காதேவி (வயலின்), அ இந்திரமதி, ந தங்கலட்சுமி, இ கேசவமூர்த்தி.

### மூன்றும் பகுதி

மா சந்திரகாந்தன், மா சத்தியமூர்த்தி, பொ கந்தேஸ்வரன், சி சிவஞானராசா சி சிவனந்தராசா, செ இரஞ்சிதமலர், இ இன்பதேவ, அ மாலினி, சி செல்வராணி, ந பவானி (வயலின்), வி எஸ் சாமினி, செ வில்லியாவத்தகலா (வயலின்), கு ஞானசுந்தரி, கு யோகசுந்தரி (வயலின்) வி கோகிலாம்பாள் இ இஞ்சினி, வி விஜயலட்சுமி, சு சுசிலாவதி, சு சுகுனராணி, ந ராஜினி.

### நான்காம் பகுதி

து. சிவஞானசௌந்தரி, ச பவானி, செ நீதிமதி [illegible] மல சித்திராவதி, க இசைஞான [illegible] வதி, நா சண்முகலிங்கம், சி பாலசாந்திரேஸ்வரி.

### ஐந்தாம் பகுதி

க சுபத்திராதேவி, சி கமலசிககிராவதி.

### ஆசிரியர் பகுதி

வே திலகவதி.

### மட்டக்களப்பு வாய்ப்பாட்டு முதலாம் பகுதி

க ஜெயமாலினி, ஜே ஜூடஸ், பா சிவமணி, பா தவமணி, என் இராசம்மா, ச சாரதாமணி

### இரண்டாம்பகுதி

சி வனஜா, ப விமலாதேவி.

### மூன்றும்பகுதி

அ பத்மாசனி.

### நான்காம் பகுதி

ந லலிதா.

வயலின்: இரண்டாம் பகுதி:- சி வனஜா.

## ஊர்காவற்றுறை பட்டினசபைக் கூட்டம்

ஊர்காவற்றுறை, திங்.

ஊர்காவற்றுறை பட்டின சபையின் மாதாந்தக்கூட்டம் தலைவர் திரு. வி. சிவசம்பு தலைமையில் நடைபெற்றது.

இரண்டாம் வட்டார அங்கத்தவர் திரு. வ. ச. ஐயாத்துரையினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை முதலில் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

''கடந்த பல வருடங்களாக ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கு மிடையில் போக்குவரத்துக்கு மிகவும் உதவியாகவிருந்த ''மாருதப்புரவி'' என்னும் மோட்டார் பாதை பழுதடைந்துவிட்டதினால் நோயாளிகள், உத்தியோகத்தர்கள், வாகனங்கள் முதலியன இதனால் பாதிக்கப்பட்டு போக்குவரத்திற்குக் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆகவே இம் மோட்டார் பாதையைத் திருத்தி வேறு இடங்களுக்கு மாற்றாது இங்கேயே திரும்பவும் சேவை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்'' எனப் பொதுமராமத்துப் பகுதியைக் கேட்கும் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

''ஊர்காவற்றுறையில் உள்ள புதிய மீன் சந்தைக் கட்டிடத்தில் இடவசதி போதாமல் இருப்பதாலும், பழையதும், புதியதும் தனித்தனியே பிரத்தியேகமாக இருப்பதாலும் அவலட்சணமாகவிருப்பதாலும் இரண்டையும் ஒரு கூரையாக்கி விஸ்தரிக்கப்படவேண்டும்'' என்ற தலைவரின் பிரேரணையும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## கயரோகம் முதலாவது எதிரி

அம்பலாங்கொடை, திங்.

'இலங்கையில் சுமார் 80,000 பேர் கயரோகத்தினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். இது எமது முதலாவது எதிரி என்றே கூற வேண்வேண்டும்.'

இவ்வாறு டாக்டர் ஆர். கீர்த்திசிங்கா இலங்கை தேசிய கயரோக தடுப்புச் சங்கத்தின் அம்பலாங்கொடை கிளைக்கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

## உபதலைவர் தெரிவு

ஊர்காவற்றுறை. திங்.

ஊர்காவற்றுறை பட்டின சபையின் நடப்பு வருட உபதலைவராக திரு. செல்வராஜா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரது பெயரை திரு. எஸ். எம். அல்பிரட் பிரேரிக்க தலைவர் திரு. வி. சிவசம்பு ஆமோதித்தார்.

திரு. ஐயாத்துரையின் பெயரை திரு. சிவலிங்கம் பிரேரித்தார். பிரேரணை தோல்வியடைந்தது.

## சென் ஜோன்ஸ் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

சுண்டிக்குளி சென் ஜோன்ஸ் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட வணபிதா வில்லியம் யேசுதாஸன் ஓ. எம். ஐ கழகத்தின் சேவையைப் பாராட்டிப் பேசுகையில் மேற்படி கழகத்தின் சமய, சமூக சேவைகளை யாழ்ப்பாண மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள் எனக் குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய கழகத் தலைவர் திரு எஸ். சிறில், 'கழகமும் இளைஞர்களும்' என்னும் விஷயம் பற்றிப் பேசினார். அவர் எதிர்கால இளைஞர்களின் கடமைகள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கழகப்பிதா: வணபிதா வில்லியம் ஜேசுதாஸன் ஓ. எம் ஐ., தலைவர்: எஸ். சிறில், உபதலைவர்: இ சென் ஜோன்ருயன், காரியதரிசி: ஏ. பீற்றர் ஜேசுதாஸன், தனாதிகாரி: கிளறன்ஸ் சேவியர். நிர்வாகசபை உறுப்பினர்களாக டி. யே. பி. யோக்கீம்பிள்ளை, ஏ. அமலதாஸன், எம். தேவதாஸன் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## புதிய சிவன்கோவிலில் மகாசிவராத்திரி விழா

உடுப்பிட்டி, திங்கள்

வவனியாவுக்கும், மன்னாருக்கும் இடையிலுள்ள காக்கையன் குளத்திற்கண்மையிலுள்ள இலுப்பைக் குளத்தில் பல்லவகாலத்து சிவலிங்கம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுச் சிவன்கோயில் கட்டியபின்னர் இம்முறை முதல்முறையாக மகாசிவராத்திரிவிழா வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இரணை இலுப்பைக்குளம் அரசினர் பாடசாலை மாணவர்களின் பஜனையுடன் ஆரம்பமான சிவராத்திரி விழாவில் திரு. சி. எஸ். மணிபாகவதர், திரு வே. சபாபதிப்பிள்ளை ஆகியோரின் கதாப்பிரசங்கங்களும், பாலம்பிட்டி நாடகக் குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும். வவனிக்குளம் உதயசூரியன் நாடக மன்றத்தினரின் 'வள்ளி திருமணம்' நாடகமும் நடைபெற்றன.

செல்வி பரமேஸ்வரி பூபாலன் இன்னிசை விருந்தளித்தார். நான்கு ஜாமப் பூசைகளும், விசேஷ அபிஷேகமும் நடைபெற்றன.

REGAL--JAFFNA
NOW SHOWING
Tony Curtis
in
40 POUNDS OF TROUBLE
(Panavision - Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
நாடோடி மன்னன்
தினசரி 4-15க்கு மட்டும்
மென் ட்ருப்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி-6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
சிவாஜி - தேவிகா
நடித்த
கர்ணன்

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொர்டேர்ன் (பண்டாரவளை) விஜிதா (அட்டன்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
இதுவரை ஹாஸ்ய பாத்திரங்களில் நடித்துவந்த நாகேஷ் இப்படத்தில் கதாநாயகனாகத் தோன்றி மிகவும் அற்புதமாக நடித்திருக்கிறார்.
நாகேஷ் - கே. ஆர். விஜயா
முத்துராமன்
எஸ். ராமராவ், காஞ்சனா
நடித்த
ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ
சர்வர் சுந்தரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கொழும்பு

செவ்வாய் 22-2-66

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 இசை மெட்டு.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல், 7-15 பேச்சு, 7-30 பஞ்சபாணம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாதஸ்வரம், 10-00 நேயர்விருப்பம்.

## ப. நோ. கூ. சங்கக் கூட்டம்

உடுப்பிட்டி, திங்கள்

அல்வாய் வடக்கு ஸ்ரீ லங்கா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேஷ பொதுக்கூட்டம் ஸ்ரீலங்கா வித்தியாசாலை மண்டபத்தில் தலைமைக் காரியாலயக் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. தி. சண்முகராசா தலைமையில் நடைபெற்றது.

நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்;

தலைவர்: ம. முருகேசன், உபதலைவி: பொ. தவமணி, காரியதரிசி: வே. மகேசன் நிர்வாகசபை உறுப்பினர்களாக மு. சரவணமுத்து, க. பாலகிருஷ்ணன், வே. தனபாலசிங்கம், செ. கந்தசாமி, நா. வேலாயுதம், சி. தங்கத்துரை ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மந்திரி பிலிப்பின் எச்சரிக்கை

பம்பலப்பிட்டி, திங்.

'திருமதி பண்டாரநாயக்கா, டாக்டர் என். எம். பெரேரா, திரு. பீட்டர் கெனமன் ஆகியோர் கறுப்புக்கொடிகள் காட்டி எம்மைப் பயமுறுத்திவிட முடியாது. அவ்விதம் அவர்கள் பயமுறுத்திவிடலாம் என எண்ணிஞல் அது நடவாத காரியம் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.'

இவ்வாறு கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனு ஹிரவத்தையிலுள்ள மலன்வதுனுவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினுர்.

திரு. பிலிப் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

ஜனவரி 8-ம் திகதியன்றே அவர்கள் நல்லபாடம் கற்றிருக்கவேண்டும். இதை மனதில் வைத்து சதிவேலைகளைக் கைவிட்டுவிடவேண்டும்.

தேசிய அரசாங்கம் கைத்தொழில் மீன்பிடித்துறைகளை அபிவிருத்தி செய்வதில் முயற்சி மேற்கொண்டுள்ளது. வேலையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.




# ஹாட்லிக் கல்லூரி இன்னிங்ஸால் வெற்றி

## சிறீஸ்கந்தராசா 18 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கட்டுக்ள் வீழ்த்திஞர்

யாழ்ப்பாணம், செவ்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற ஒரு கிரிக்கெட் போட்டியில், ஹாட்லிக் கல்லூரி ஒரு இன்னிங்ஸாலும் 46 ஓட்டம்களிஞலும் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் ஹாட்லி அதிவேகப் பந்தெறி வீரர் சிறீஸ்கந்தராஜா சிறப்பாக விளையாடி 18 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கெட்டுக்களை வீழ்த்திஞர். மற்றும் இரத்தினராஜா, காலகண்டன் ஆகியோரும் ஹாட்லிக்காக சிறப்பாக விளையாடிஞர்கள்.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரியினர் சகல விக்கட்டுகளையும் இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் காலகண்டன் 23 ஓட்டங்களையும் பாலசுப்பிரமணியம் 15 ஓட்டங்களையும், துரைரத்தினம் 31 ஓட்டங்களையும், செல்வானந்தராஜா 41 ஓட்டங்களையும், இரத்தினராஜா 56 ஓட்டங்களையும், சிறீஸ்கந்தராஜா 25 ஓட்டங்களையும் பெற்றனர். இச் சந்தர்ப்பத்தில் தேவராசா 61 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கெட்டுக்களையும், சிறீகாந்தா 56 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்திஞர்கள்.

இதையடுத்து மகாஜனு வீரர்கள் துடுப்பெடுத்து ஆடியபொழுது, சகல விக்கெட்டுகளையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் தருமச்சந்திரன் 10 ஓட்டங்களையும், கணநாதன் விக்கெட் இழக்காமல் 19 ஓட்டங்களையும் சுகுணேந்திரன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஹாட்லி எறிபந்து வீரர்களான சிறீஸ்கந்தராஜா 18 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 3 விக்கெட்டுகளையும், செல்லையாபிள்ளை 16 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு இரு விக்கெட்டுகளையும், சிவபாலன் 6 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 1 விக்கெட்டையும் வீழ்த்தினர். ஹாட்லி "விக்கெட் கீப்பர்" காலகண்டன் சிறப்பாக விளையாடி ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்துவதற்கு உதவியாயிருந்தார்.

மகாஜனக் கல்லூரி 2-வது இன்னிங்சை துடுப்பெடுத்தாடியபொழுது அது சகல விக்கெட்டுகளையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இரத்தினநாதன் 17 ஓட்டங்களையும், விஜயகுமார் 12 ஓட்டங்களையும், குமாரலிங்கம் 16 ஓட்டங்களையும், தருமச்சந்திரன் 35 ஓட்டங்களையும், கணநாதன் 12 ஓட்டங்களையும் தேவராசா ஆட்டம் இழக்காமல் 11 ஓட்டங்களையும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் சிறீஸ்கந்தராஜா 30 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு இரு விக்கெட்டுகளையும், பியூவல் 8 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு இரு விக்கெட்டுகளையும் செல்லையாபிள்ளை 30 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு இரு விக்கெட்டுகளையும், இரத்தினராஜா 14 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு மூன்று விக்கட்டுகளையும் செல்வானந்தராஜா 5 ஓட்டங்கள் நஷ்டத்துத்துக்கு 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டி முடிவில் ஹாட்லிக்கல்லூரி ஒரு இன்னிங்ஸாலும் 46 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது. இப்போட்டி ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.——

## கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

பருத்தித்துறை, திங்.

சித்திரைவருடப்பிறப்பை முன்னிட்டு அல்வாய்தெற்கு கைப்பந்தாட்டக்கழகம் அல்வாய் முத்துமாரியம்மன் கோவில்வீதியில் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்த இருக்கின்றது. இதற்கு உடுப்பிட்டி பாராளுமன்ற அங்கத்தவர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமைதாங்குவர். போட்டிகள் பங்குனி மாதம் 19-ந் திகதி ஆரம்பமாகும். இப்போட்டி எ, பி, என இரண்டு பிரிவாக நடாத்தப்படும். இதில் இலங்கையின் எப்பாகத்தில் உள்ளவர்களும் பங்கு பற்றலாம். வெற்றி பெற்ற கழகங்களுக்கு வெற்றிக்கேடயமும் பரிசில்களும் வழங்கப்படும். கடைசி ஆட்டமும் பரிசளிப்புவிழாவும் சித்திரை வருடப்பிறப்பன்று இடம் பெறும்.

வவனியாவில்

## ஆசிரியர் நியமனம் பற்றி எம். பி. கேட்பார்

பம்பலப்பிட்டி, திங்கள்

வவனியா மாவட்டத்திலுள்ள எட்டு மகாவித்தியாலயங்களுக்கும் விஞ்ஞானப் பட்டதாரிகள், கலைப் பட்டதாரிகள், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் தேகப்பயிற்சிப் போதனசிரியர்கள், கமத்தொழில் ஆசிரியர்கள், நெசவு ஆசிரியர்கள் ஆகியோர் எவ்வளவு பேர் தேவைப்படுகிருர்களென கல்வி, கலாச்சார விவகார அமைச்சரை வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் கேட்கவிருக்கிருர்.

இக்கல்வி நிலையங்களுக்குத் தேவையான போதியளவு ஆசிரியர்களை மந்திரி எவ்வாறு நியமிக்க உத்தேசிக்கின்ருர் என்றும் எப்பொழுது நியமிப்பாரென்றும் திரு. சிவசிதம்பரம் கேட்கவிருக்கிருர்.

## பாகிஸ்தான் மீன்பிடி எல்லை

ராவல்பிண்டி, பெப். 20

பாகிஸ்தான், தனது மீன்பிடி கடல் எல்லையை 3 மையிலிலிருந்து 12 மைல் தூரத்துக்கு விஸ்தரித்திருக்கிறது. இதற்கும் அப்பால் 100 மைல் தூரத்துக்கு மீன்பிடிப்பை கட்டுப்படுத்துவதெனவும் அது தீர்மானித்திருக்கிறது. அதன் அறிவித்தல் இந்தப் பிரகடனத்தை இன்று வெளியிட்டார்.

## இராமரும்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ருலே சாஸ்திரங்களின் மெய்ப்பொருள் என்பதையும், பழைய வேதங்களின் சாரம் என்பதையும் அறியப்பெற்றேன். இந்து ஜன சமூகம் முழுதும் இதுவரை தொன்று தொட்டுக் கண்ட உண்மைகள் அத்தனையும் இவர் ஒரே வாழ்க்கையில் எண்பித்து அங்ஙனமே ஒழுகியவர். எல்லா சமயத்தையும் பேணி, அவைகளின் சாஸ்திரங்களின்படி ஒழுகி தமதுவாழ்க்கையால் வியாக்கியானம் செய்ததோடு, உண்மைஒன்றே. அதைப்பல பேர் பலபெயரிட்டு அழைக்கின்றனர்' என்றவேதவாக்கியத்தை நிலைநாட்டிச் சென்ருர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் மனித உருத்தாங்கி தெய்வத்தன்மையை நிலைநாட்டினுர் என்பது அவரது செயல்களும், சிந்தனை மிகுந்த உபதேசங்களும் நிரூபிக்கின்றது. அவர் உலகத்வரோடு ஒழுகிய வகையும், உலகத்தாரது சுகதுக்கத்தை தமதாக்கி வாழ்ந்ததையும், ஆசையைவேரற அழித்ததும் நம் எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியான வாழ்க்கை என்பதைநன்கு விளக்குவன

குருதேவர் அருளிச்சென்ற உபதேசங்களையும், பொன்மொழுகளையும், நம் வாழ்க்கையில் புகுத்தி அவரது கொள்கைகளையும், அமுதமனைய அறிவுரைகளையும்நம் நன்குமனதில்நிலைக்கசெய்து அப்பகவான் சென்ற சுத்த சன்மார்க்க நெறியில் நம் அனைவரையும் அழைத்துச் செல்ல அன்னுரின் பிறந்த தினத்தன்று குருதேவரை சிந்தையில் நினைந்து தியானித்து நாம் எல்லோரும் கடைத்தேற முன்நின்று உழைப்போமாக.

## நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். பொலிஸ் ரோந்து நடக்கிறதென்ற எண்ணமே திருடர்களின் குறுகுறுக்கும் கைகளைச் சிறிதே அடக்கி வைக்கும். ரோந்து வரும் பொலிஸ்காரர் கிராமத்தில் உள்ள முக்கியமானவர்களின் வீடுகளில் ரோந்து புத்தகங்களில் ஒழுங்காகக் கையொப்பம் இடல்வேண்டும். இதுவும் போதாது.

கிராமம் தோறும் கண்ணியமான இளைஞர்கள் சேர்ந்து தொண்டர்படைகளை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டும். இதில் ஒரு சிறிய சூட்சுமம் இருக்கிறது. அநேகமான திருட்டுகள் கிராமத்தில் இருப்பவர்களாலோ அல்லது அவர்களுடைய ஒத்துழைப்பாலோ தான் நடைபெறுகின்றன. ஆகையால் தொண்டர் படையில் இருப்பவர்கள் இன்னஇன்னுர் தான் என்பது பகிரங்கமாகாமல் கிராம சேவையாளர் உட்பட இரண்டொருவருக்குத் தான் வெளிச்சமாயிருக்க வேண்டும். ஒருவர் தொண்டர்படையில் சேர்ந்தவர் என்பதை அறிந்தால் திருட்டு ஆசாமி ஜாக்கிரதையாயிருப்பான். விஷயம் அம்பலமாகாமல் இருந்தால் தான் தொண்டர்கள் உளவறிவதற்கும் வசதியாயிருக்கும். தொண்டர்படைகள் இரவில் மட்டுமன்றி பகலிலும் கண்ணுக்குள் எண்ணெயை வட்டுக்கொண்டு சர்வாவதானமாய் இருக்க வேண்டும்.

-வழிப்போக்கன்

(5-ம் கலத்தொடர்ச்சி)

தலைவர்: சி. மு. அப்துல் காதர், உபதலைவர்: சி. வேலுப்பிள்ளை, காரியதரிசி: வ. முடியப்பு. நிர்வாகசபை உறுப்பினர்களாக வ. கந்தையா, தா. சின்னையா, எஸ். சிறீஸ்காந்தன், அ. இம்மனுவேல், அ. நல்லையா, அ. அருணசலம்.

## வரிவிளம்பரம்

### தேவை

சிறு பெண்கள். 15 வயதுக்குள். நேரில் வரவும். டாக்டர். வி ரி. பெர்னுண்டோ, 11, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 1955

### விற்பனைக்கு

CL 1759 மொறிஸ்-8 விற்பனைக்குண்டு. சு. சிறிராசசிங்கம், காட்டுக்கந்தோர், கச்சேரி, யாழ்ப்பாணம். 1952

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய யாதிகள் குணமடுபடுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சுகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## பாராட்டு விழா

பருத்தித்துறை, திங்கள்

'மக்களின் நலனுக்காக ஆற்றும் சேவையே மகத்தானதாகும்' என்று சமாதான நீதவாருக நியமிக்கப்பட்ட தென்புலோலியூர் கந்தர் கணபதிப்பிள்ளையைப் பாராட்டுமுகமாக அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் உடுப்பிட்டி எம் பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறினுர்.

இளைப்பாறிய முன்னுள் வித்தியாதிபதி திரு. கே. எஸ். அருள்நந்தி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு மந்திகை அம்மன் ஆலயத்தில் இருந்து சமாதான நீதிபதி, உடுப்பிட்டி எம். பி. ஆகியோர் ஊர்வலமாக புலோலி மெதடிஸ்த பாடசாலைத் திறந்தவெளியரங்கிற்கு அழைத்துவரப்பட்டனர்.

திருமலைக் காரியாதிகாரி திரு. யே. டி. ஆர்ணல்ட், திரு. வி. தங்கராசா, பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. ந நடராசா, திரு. ஜோ. மு. ஆழ்வாப்பிள்ளை, வழக்கறிஞர் திரு. வி. செல்லத்தம்பி உட்படப் பலர் பாராட்டுரைகள்வழங்கினர்

விழாவில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றதைத் தொடர்ந்துசெல்வன் வே. ஸ்ரீஸ்கந்தராசா நன்றி கூறி விழாவை முடிவுறச்செய்தார்.

## "சிறந்த சேவை அளிப்போம்"

பூநகரி, திங்கள்

பல்லவராயன்கட்டுப் பலநோக்கு கூட்டுறவு சமாஜ வருடாந்தப் பொதுக்கூட்டம் பூநகரிப்பகுதி கூட்டுறவு வட்டாரப் பரிசோதகர் திரு. க. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது ஆரம்ப உரையில் சென்ற வருடம் கூட்டங்கள் ஒழுங்காக கூடவில்லையென்றும், பொதுக்கூட்டம் உரிய காலத்தில் கூடவில்லையென்றும் பல்லவராயன்கட்டில் தற்போது இருக்கும் மக்களுக்கும், குடியேற்றவாசிகளுக்கும் இச்சங்கம் சிறந்த சேவையை செய்யக்கூடியதாக இருக்கும் என்றும் கூறினுர்.

சகல வித்தியாசங்களையும் மறந்து எல்லா மக்களும் கூட்டுறவு அடிப்படை தத்துவங்களுக்கமைய தங்களுக்குள்ளே ஒற்றுமையை ஏற்படுத்தி தாங்களே சங்கத்தை விசேஷமாக நிர்வாகசபையாரே நடத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரியில்

# வலைகளை சேதப்படுத்தினர்; 20 பேர் சந்தேகத்தில் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

பூநகரிப்பகுதியிலுள்ள மீனவர்களுக்குச் சொந்தமான மீன்பிடி வலைகளைத் சேதப்படுத்தியது சம்பந்தமாககுருநகரைச் சேர்ந்த20 பேர் சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டுள்ளனர்

பூநகரி மாவட்ட காரியாதிகாரியின் உத்தரவின் பேரிலேயே யாழ்ப்பாணம் பொலிசார் இவர்களைக் கைதுசெய்துள்ளதாக அறியப்படுகிறது.

பூநகரிப்பகுதிக் கடலில் விரிக்கப்பட்டிருந்த வலைகளை இந்த நபர்கள் டைனமட் பிரயோகித்து சேதப்படுத்தியதாக அறியப்படுகிறது.

இதுசம்பந்தமாக சப் இன்ஸ்பெக்டர் அலுவிகாரா தொடர்ந்து விசாரணை செய்துவருகிறார். (ந. நி.)

## இடம் பெயர்ந்தவர்கள் 3 லட்சம் பேர்!

புதுடில்லி, பெப். 21

கடந்த செப்டம்பர் மாத இந்திய-பாகிஸ்தான் சண்டையின்போது வேறு பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் தொகைமூன்று லட்சம் என்று ராஜ்யசபையில் அறிவிக்கப்பட்டது. ஜம்மு-காஷ்மீருக்குள் இரண்டரை லட்சம் பேரும் பஞ்சாபக்குள் 50 000 பேரும் அஸாமுக்குள் 50,000 பேரும் இடம் பெயர்ந்து வந்தனர் என்றும் இவர்கள் தங்களது பகுதிகளுக்குத் திரும்பிச் செல்ல சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்களின் மகாசிவராத்திரி விழா

உடுப்பிட்டி, திங்கள்

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு யாழ். கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் கோஷ்டியொன்று தமிழ் விரிவுரையாளர் திரு. சு. சுந்தரபபிள்ளை தலைமையில் திருக்கேதீச்சர யாத்திரையை மேற்கொண்டது. இந்த யாத்திரைக்குழு திரும்புகையில் மன்னார், தலைமன்னார் துறைமுகம், புனித மடுமாதாகோயில், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை முதலியவற்றுக்கும் விஜயம் செய்தது.

## தாயகம் திரும்பினார்

லண்டன், பெப். 21

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு சுற்றுவிஜயம் செய்த தன்ஸானிய வர்த்தகமந்திரி தாயகம் திரும்பினார். அவரது சுற்றுவிஜயம் நல்லபலன் தந்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

## நசூதியானுக்கு இடமில்லை

ஜாகர்த்தா, பெப். 21

ஜனாதிபதி சுகர்னோ நிறுவியுள்ள புதிய மந்திரிசபையிலிருந்து பாதுகாப்பு மந்திரி ஜெனரல் நசூதியான் விலக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## அட்மிரல்நிமிட்ஸ் காலமானார்

சான்பிரான்ஸிஸ்கோ, பெப். 21

சென்றயுத்தத்தின்போது பசிபிக் பிராந்திய தளபதியாக இருந்த அட்மிரல் நிமிட்ஸ் இன்று தன் 80வது வயதில் காலமானார். சான்பிரான்ஸிஸ் கோவுக்கருகிலுள்ள அவரது இல்லத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

## இடமாற்றம்

பருத்தித்துறை, திங்கள்

புலோலி மெதடிஸ்த அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு த. சிதம்பரப்பிள்ளை புற்றளை வித்தியாலயத்துக்கும் புற்றளை வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு. தி. கந்தசாமி புலோலி மெதடிஸ்த அரசினர் பாடசாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தீவுப்பகுதி

## தாமதிக்கும் தபாற்சேவை

ஊர்காவற்றுறை, திங்

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறைக்கு வந்துசேரும் கடிதங்கள் தாமதமாக வருவதால் நெடுந்தீவு அனலைதீவு முதலிய தீவுகளுக்குப் போகவேண்டிய தபால்கள் சுணக்கமாகவே போய்ச் சேருவதாகத் தெரிகிறது.

## வான் தீப்பிடித்தது

யாழ்ப்பாணம், செவ்,

யாழ்ப்பாணத்திலுள்ள வான்கள் நிறுத்தப்பட்டிருக்கும் நிலையத்தில் நேற்றுமாலை திடீரென ஒரு வான் தீப்பற்றிக்கொண்டது. அப்பொழுது வான் புறப்படுவதற்கு ஆயத்தமாயிருந்தது. வானிலிருந்து தீ எரிவதைக் கண்ட சாரதி உடனடியாக இறங்கி தீயை அணைக்கமுயற்சித்த போது பொது மக்களும் கூடி அவருக்கு உதவி புரிந்தனர்.

## அடையாறு கலைஞர்கள்

சென்னை, பெப் 21

அடையாறு கலாக்ஷேத்திரத்தைச் சேர்ந்த 17 கலைஞர்கள் ஆஸ்திரேலியாவில் 3 மாதம் கலைநிகழ்ச்சிகளை நடத்திக் காட்டும் பொருட்டு அங்கு சென்றிருக்கிறார்கள்.

ஆஸ்திரேலிய கலைக்கழகமும், அடிலெயிட் கலைக்கழகமும் விடுத்த அழைப்பின் மீது அவர்கள் அங்கு சென்றிருக்கிறார்கள்.

கலாக்ஷேத்திரத் தலைவி ஸ்ரீமதி . ருக்மணிதேவியும், டச்சு நாடக நிபுணர் ஒருவரும் இக்கோஷ்டியில் சென்றிருக்கிறார்கள்.

ஆஸ்திரேலியாவில் 90 நிகழ்ச்சிகளை கலாக்ஷேத்திரக் கலைஞர்கள் நடத்திக்காட்டுவார்கள். அடிலெய்டில் நடைபெறும் சர்வதேசக் கலைவிழாவிலும் இவர்கள் பங்குகொள்வார்கள்.

## கடல் கொந்தளிப்பு

ரபாட், பெப் 21

இன்று மொராக்கோவில் ஏற்பட்ட கடல்கொந்தளிப்பு காரணமாக பலர் மூழ்கினர். பல படகுகள் சேதமுற்றன.

காமராஜர்

## அமெரிக்கருக்கு அறிமுகம்

நியுயோர்க், பெப். 21

நேற்றைய "நியுயோர்க் டைம்ஸ் சஞ்சிகையில்" திரு. காமராஜர் பற்றி நீண்ட கட்டுரை ஒன்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

முதல் பக்க அட்டையில காமராஜரின் வண்ண ஓவியம் காட்சியளிக்கிறது. "இந்தியாவின் சகதிவாய்ந்த மனிதர்" என்ற தலைப்பில் அவரது பல்வேறு குணங்கள் அமெரிக்கர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தரங்க வாழ்வில் அவரது நேர்மை, அரசியல் ஆதிபத்தியத் திறமை, சாதாரண மனிதனின் பொருளாதார அவிருத்தியில் சித்தாந்தமற்ற ஆனால் ஆக்கபூர்வமான அவரது யோசனை, தற்போதைய இந்திய தேசிய வாழ்வில் அவரது பங்கு ஆகியன இந்த நீண்ட கட்டுரையில் கூறப்பட்டுள்ளன. (பி. டி. ஐ)

# டாஷ்கண்ட் பிரகடனத்தை லோகசபை அங்கீகரித்தது

புதுடில்லி, பெப். 21

டாஷ்கண்ட் பிரகடனத்தைலோகசபை இன்று அங்கீகரித்தது. ராஜ்ய சபாவில் இதுசம்பந்தமான விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது.

காஷ்மீரில் படைகளைக் குறைப்பதால், லடாக்கின் பாதுகாப்பு எந்தவிதத்திலும் பாதிக்கப்படாதுஎன்று இந்திய பாதுகாப்பு மந்திரி திரு.வை.பி சவான் இன்று ராஜ்யசபையில் தெரிவித்தார்.

ராஜ்ய சபையில் இன்று அங்கத்தவரொருவர்கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில்தான் அவர்மேற் கண்டவாறு கூறினார்.

டாஷ்கண்ட் பிரகடனத்தில் எதுவும் இரகசியங்கள் இருக்கின்றனவா என்று ஒரு அங்கத்தவர் கேட்டார்.

அதற்கு திரு. சவான் பதிலளிக்கையில; டாஷ்கண்ட் பிரகடனத்தில் இரகசிய ஷரத்துக்கள் எதுவும் கிடையவே கிடையாது என்று மீண்டும் உறுதிகூறினார்.

காஷ்மீரில் இந்தியா, பாகிஸ்தான் துருப்புக்கள் குறைப்பு பற்றி அவர் தெரிவிக்கையில்; இந்தமுடிவை டாஷ்காண்ட் பிரகடனத்தில் [illegible]றிப்பிடாதபொழுதிலும் இருநாட்டு ராணுவ தளபதிகளும் செய்துகொண்ட தீர்மானமென்று கூறினார்

'காஷ்மீரில துருப்புக்களை கட்டுப்படுத்துவதன் மூலம் லடாக்கின் பாதுகாப்பு பலவீனமடையாது. அதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன' என்றும் பாதுகாப்பு மந்திரி திரு.சவான் கூறினார்.

## கத்தியால் குத்திக்கொலை

யாழ்ப்பாணம், திங்கள்

கோப்பாய் போயிட்டியைச் சேர்ந்த மனுவல் கபிரியல் என்பவர் இன்று மாலை கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார், இதுசம்பந்தமாக வயிரவன் கோவிந்தன் என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. கே. இராசரத்தினம் விசாரணை நடத்துகிறார். (ந. நி.)

## வீராங்கனை

நியுயோர்க், பெப்.21

ரஷ்யாவைச் சேர்ந்த ரரியானு ஷெல்கனேவா நீளம் பாய்தலில் (பெண்கள்) உலக சாதனை ஏற்படுத்தியுள்ளார் இவர் 21 அடி 5 1/2 அங்குலம் பாய்ந்திருக்கிறார். இந்தசாதனை நியுயோர்க் விளையாட்டுக் கழகப் போட்டியில் நிலைநாட்டப்பட்டது.

முந்திய சாதனை: 20 அடி 10 அங்குலம்.

(பி. டி. [illegible]

## எச்சரிக்கை

லண்டன், பெப். 21

ரொடீஷியாவுக்கு எண்ணெய் விநியோகித்து வருவது சம்பந்தமாக தென்னாபிரிக்காவை பிரிட்டன் கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளது.

## இத்தாலி அரசாங்கம்

லண்டன், பெப். 21

இத்தாலியின் புதிய அரசாங்கம் நாளை செவ்வாய்க்கிழமை பதவியேற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தோட்டப் பகுதிகளில்

# பலாத்கார சம்பவங்கள்: மந்திரி ஆராய்வார்

பம்பலப்பிட்டி, திங்

தோட்டப்பகுதிகளில் அதிகரித்துவரும் பலாத்காரச் சம்பவங்கள் பற்றி ஆராய்வதற்காகத் தொழில்மந்திரி ஜனாப் எம். எச் முகமது தோட்டப்பகுதியில் உள்ள ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளை அழைத்துள்ளார். இப்பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் மகாநாடு வரும் வெள்ளிக்கிழமை அன்று நடைபெறவிருக்கிறது.

இலங்கைத் தோட்ட முதலாளிமார் சம்மேளனம், இலங்கை உற்பத்தியாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் சமீபத்தில தொழில் மந்திரியைச் சந்தித்துத் தோட்டப் பகுதிகளில் தோட்ட உத்தியோகத்தர் சிலான் வன்முறைச் செயல்கள் பற்றிப் புகார்தெரிவித்திருந்தனர்

இலங்கைத் தொழிலாளர் கழகம் தொழிற்கமிஷனருக்கு அனுப்பியிருந்த மகஜரில் பின்வருமாறு தெரிவித்திருந்தது:

அநேகமாகத் தோட்டத் தொழிலாளர்கள் அடக்கசுபாவமுள்ளவர்கள் எனவே தோட்டப்பகுதியில் அசம்பாவிதம் ஏதும் ஏற்படுவதென்றால் அவர்களது கஷ்டநிலையே காரணமாயிருக்கும். மனித தர்மரீதியான பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்காதபட்சத்தில் அச்சம் நிலவத்தான் செய்யும்.

பொருளாதார ரீதியில் தோட்டத் தொழிலாளருக்கு எதுவித பாதுகாப்பும் இல்லை. இந்தத் தொழிலாளி மட்டுமல்ல. அவனது மனைவி குழந்தைகள் எல்லோருமே ஒவ்வொரு நாளும் காலையில் இருந்து மாலைவரை உழைக்கவேண்டியிருக்கிறது செலவுக்குப் போதாத உறுதியற்ற வருமானத்துக்காக அவர்கள் இப்படி அல்லும் பகலும் உழைக்கவேண்டிய நிலையிருக்கிறது. மிகச்சிறிய காரணங்களுக்காக இத்தொழிலாளர்கள் சம்பளத்தை இழக்கவேண்டி நேரிடுகின்றது அபராதமும் செலுத்தவேண்டி இருக்கின்றது. சிற்சிலவேளைகளில் வேலையிலிருந்து தற்காலிகமாக இவர்கள் நீக்கப்பட்டும் ஓரேயடியாக வேலைநீக்கம் செய்யப்படும் [illegible]கள். தொழில் இலாகாவின் ஆறுதலான வேலைகளும், தொழில் நீதிமன்றங்களின் ஆறுதலான நடவடிக்கைகளும. இந்தத் தோட்டத் தொழிலாளியின் அவலநிலைக்கு மேலும் வேதனையைத் தருகின்றன.

இத்தோட்டத் தொழிலாளி வயோதிப காலத்தில் அல்லது சுகவீனம் காரணமாக ஓய்வுபெறும்போது அவனுக்கு நல்லவிதமான பாதுகாப்பும் அளிக்கப்படுவதில்லை. அவன் ஓய்வுபெற்றுப் பல வருடங்களின் பின்பே முதலாளியிடமிருந்து அவனுக்குச் சொற்பதொகை கிடைப்பது வழக்கம்.

இவ்விதமாகத் தோட்டத் தொழிலாளி மிகவும் மோசமானதொரு சூழ்நிலையிலேயே வாழ்கின்றான். அவனது பிள்ளைகளும் நல்ல முறையான கல்விபெற்று முன்னேறுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவென்று தான் சொல்லவேண்டும்.

இவற்றை எல்லாம் நிவர்த்தி செய்வதற்காக தொழிலாளிக்கு நியாயமான மாதச்சம்பளம் வழங்கப்பட வேண்டும். தோட்ட உத்தியோகஸ்தர்களின் தொந்தரவுகளுக்குள்ளிருந்து அவர்கள் காப்பாற்றப்பட வேண்டும். தொழில் தகராறுகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும். இதற்காக தொழில் இலாகாவும் தொழில் நீதிமன்றங்களும் விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளரின் குறைபாடுகள் சம்பந்தமாக ஆராய்வதற்காக தொழில்மந்திரி கூட்டும் மகாநாட்டில் பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

விவசாய திட்டம்

## உலக வங்கி நிபுணர் அங்கீகாரம்

கொழும்பு. திங்கள்

உணவு விவசாய அமைச்சு தயாரித்துள்ள ஐந்தாண்டுத் திட்டத்தை தற்போது கொழும்பு வந்திருக்கும் உலகவங்கி ஆலோசகர் அங்கீகரித்திருப்பதாகத்தெரிகிறது. இத்திட்டம் சமீபத்தில் பிரசுரிக்கப்பட்டது

## காணவில்லை

நேற்று கீரிமலை—யாழ்ப்பாணம் பஸ்ஸில் இ. போ. ச. டிக்கட் புத்தகம், வேறு சில பொருட்கள் அடங்கிய 'பேக்' காணவில்லை. கண்டெடுத்தவர் தயவுசெய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானமாக ரூபா 25[- வழங்கப்படும். 1954

○

கார்த்திகேசு வல்லிபுரம் என்பவருடைய 'காரிலைசென்சும்', 'இன்சூரன்சும்' காணவில்லை. கண்டெடுத்தவர் தயவுசெய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1953

## நன்றி நவிலல்

எனது சகோதரர் தம்பிமுத்து ஞானசேகரத்தின் மரணச்சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் நானும், எனது குடும்பத்தினரும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். த. ஞானசகாயம், தொண்டமானாறு. 1956

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்கள அச்சகத்தில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org